இதழ்-91

01.01.2026

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thu-

ஆசிரியர்
ச.சந்தோஷன்

இணை ஆசிரியர்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

செய்தியியலாளர்
ச.மதுஷா

வடிவமைப்பாளர்
ர.அபிரா
வ. குணநீதன்

திறனாய்வாளர்
கு.கீர்த்தனன்

# இவ்விதழில் துமித்தவை....

03 இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்தும் மலையக உறவுகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்

09 பஞ்ச பூதங்களும் முகவடிவாகும்

10 இலங்கைப் பெருவெள்ளம்: நீர் வடிந்த பின்பும் நீடிக்கும் மனக்காயங்கள் – உளவியல் மீட்சிக்குத் தேவைப்படும் அவசர கவனம்

15 தமிழ் பழமொழிகள் மற்றும் மனித நடத்தை உளவியல்

21 அவசரக்கார சாமியாரும் அந்த இரண்டு மரங்களும்!

23 நாக்கின் வலிமை

25 அரும்பணியாற்றிய அமரர் லேடி இராமநாதன் அம்மையாருக்கு உருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது

27 இலங்கையில் பேரிடர் மேலாண்மை

32 ஐபிஎல் மினி ஏலம் அணிகளுக்கு ஏற்றமா? ஏமாற்றமா?



வாசகர்களுக்கு
தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

ஆசிரியர் பதிவு

# இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்தும் மலையக உறவுகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் இருநூறு ஆண்டுகால வாழ்வியலைச் சீர்தூக்கிப் பார்க்கையில், அது வெறும் உழைப்பின் வரலாறாக மட்டுமல்லாமல், ஒரு சமூகத்தின் கட்டமைக்கப்பட்ட வறுமையின் சாட்சியமாகவும் விளங்குவதை நாம் உணர முடியும். நீண்டகாலமாக இந்தச் சமூகம் சந்தித்து வரும் சிக்கல்கள் தனிப்பட்ட நபர்களின் பிழையல்ல, மாறாக அவர்கள் வாழும் மற்றும் பணிபுரியும் ‘அமைப்பு’ சார்ந்த குற்றமாகும். இதனைப் பொருளாதார மேதைகளின் கோட்பாடுகளின் ஊடாகப் பார்க்கும்போது, வறுமை என்பது வெறும் பணமின்மை அல்ல, மாறாக அது ஒரு மனிதன் தனது வாழ்க்கையைத் தீர்மானிக்கக்கூடிய ‘தேர்வுகளும் வாய்ப்புகளும்’ அற்ற நிலையே என்பது தெளிவாகிறது.



இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாகத் திகழும் இந்தச் சமூகம், இன்றும் லயன் குடியிருப்புகளுக்குள்ளேயே முடக்கப்பட்டிருப்பது வேதனையளிக்கும் உண்மை. நில உரிமை இன்மை, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி குறைபாடு மற்றும் சுகாதாரச் சீர்கேடுகள் போன்றவை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு வறுமையைக் கடத்தும் சங்கிலிகளாகச் செயல்படுகின்றன. குறிப்பாக, தோட்டப் புறங்களில் நிலவும் ஊட்டச்சத்துக் குறைபாடு தேசிய சராசரியை விட அதிகமாக இருப்பதும், மாணவர்களின் கல்வி அடைவு மட்டம் குறைவாக இருப்பதும் அச்சமூகத்தின் எதிர்கால அறிவாற்றல் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துகின்றன.

இந்த முட்டுக்கட்டைகளை உடைத்தெறிய ஓர் அறிவியல் அடிப்படையிலான மாற்றம் காலத்தின் கட்டாயமாகும். மாற்றமானது விரைவாகவும் நீண்ட கால பார்வையிலும் முன்னெடுக்கப்பட வேண்டும். முதலாவதாக, நிலமும் வீடும் ஒரு மனிதனுக்கு வழங்கப்படுவது என்பது வெறும் தங்குமிடம் சார்ந்தது மட்டுமல்ல, அது அவர்களின் சமூகச் சுதந்திரத்தின் தொடக்கமாகும். குறிப்பாக வீட்டு உரிமையைப் பெண்களின் பெயரில் வழங்குவது அவர்களின் அதிகாரத்தையும் சமூகப் பாதுகாப்பையும் பலமடங்கு உயர்த்தும். அத்துடன், ஆரம்பக் கல்வியிலும் ஊட்டச்சத்திலும் முதலீடு செய்வது வருங்காலத் தலைமுறையின் புத்திசாலித்தனத்தையும் வருமானத்தையும் நேரடியாக அதிகரிக்கச் செய்யும்.

வாழ்வாதாரத்தை வெறும் தேயிலையுடன் மட்டும் சுருக்கிக் கொள்ளாமல், மலர்ச் சாகுபடி, சுற்றுலா, தேனீ வளர்ப்பு எனப் பல்வகைப்படுத்துவது இளைஞர்களுக்கான புதிய



வேலைவாய்ப்புகளை உருவாக்கும். அதேவேளை, கல்வி கற்ற இளைஞர்கள் முறையான வழிகாட்டலுடன் பாதுகாப்பான முறையில் இடம்பெயர்ந்து சிறந்த வேலைவாய்ப்புகளைப் பெறுவதும், அவர்கள் ஊருக்கு அனுப்பும் பணம் தோட்டப்புறப் பொருளாதாரத்தைச் சீரமைப்பதும் ஒரு சுழற்சி முறையிலான வளர்ச்சியைத் தரும்.

இந்த மாற்றத்தின் ஒரு முக்கிய அங்கமாக, கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் முன்வைத்துள்ள கருத்தைப் பரிசீலிப்பது மிகவும் அவசியமானது. வடக்கு மாகாணத்தின் சமதரைப் பகுதிகளில் மீளக் குடியேற விரும்பும் மலையக உறவுகளுக்கு அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது ஒரு வரலாற்றுத் திருப்புமுனையாக அமையும். இது ஒரு இடம்பெயர்வு என்பதைத் தாண்டி, புதியதொரு வாழ்வாதாரத் தேடலுக்கான வாசலாக அமையும். வடக்கில் விவசாய நிலங்கள் பரந்து விரிந்து கிடப்பதால், கடின உழைப்பைத் தாரக மந்திரமாகக் கொண்ட மலையக மக்கள் அங்குச் சுதந்திரமான விவசாயிகளாகத் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள முடியும். இது அவர்களுக்குச் சொந்த நிலத்தின் மீதான அதிகாரத்தையும், சுயதொழில் செய்பவர்கள் என்ற மதிப்பையும் வழங்கும்.

மேலும், வடபகுதிக்கும் மலையக சமூகத்திற்கும் இடையிலான பிணைப்பு வலுவடைவது தமிழ்ச் சமூகத்தின் ஒட்டுமொத்தப் பலத்தை அதிகரிக்கும். அங்கு நிலவும் கல்விச் சூழல் மற்றும் கலாச்சாரக் கட்டமைப்புகள் தோட்டப் புற இளைஞர்களுக்குப் புதியதொரு உலகைத் திறந்துவிடும். இது வெறும் இடமாற்றம் அல்ல, ஒரு சமூகத்தின் மீதான கட்டமைப்பு ரீதியான ஒடுக்குமுறையிலிருந்து விடுபட்டு, சுயமரியாதையுடனும் பொருளாதாரச் சுதந்திரத்துடனும் வாழ்வதற்கான ஒரு மாற்று வழியாகும்.

இறுதியாக, தோட்டத் தொழிலாளர்கள் என்பவர்கள் நமது கருணைக்குரியவர்கள் அல்ல, மாறாக அவர்கள் ஆற்றல்மிக்க உழைப்பாளர்கள். அவர்களது திறன்களை முடக்கி வைத்திருக்கும் ‘அமைப்புச் சார்ந்த வறுமையை’ அகற்றி, கல்வி, சுகாதாரம், நில உரிமை மற்றும் புதிய வாழ்விடங்களுக்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும். இந்த அறிவியல் பூர்வமான மாற்றத்தை நோக்கி நாம் அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதும், அத்திட்டங்களைச் செயல்படுத்த அழுத்தம் கொடுப்பதுமே அச்சமூகத்திற்கு நாம் செய்யும் உண்மையான நன்றிக்கடனாகும். ஒரு சமூகத்தின் திறன்களை வெளிக்கொண்டு வருவதே உண்மையான மனித மேம்பாடு என்பதை உணர்ந்து செயல்பட வேண்டிய தருணம் இது.






நாம் வழிபடுகிற எத்தனையோ தெய்வங்கள் இந்த பூகோளத்தை கண்காணித்துக் கொண்டிருந்தாலும் இந்த பூமியை ஆள்வது என்பது பஞ்சபூதங்கள் மட்டுமே..

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களில் ஒன்று நினைத்தால் கூட இந்த பூவுலகை ஒன்றுமில்லாமல் செய்துவிட முடியும்.

இது கடந்த வருடம் மட்டுமல்ல.. கடந்து சென்ற பலகோடி வருடங்கள் கற்றுத்தந்த பாடம்.

பஞ்ச பூதங்கள் நிகழ்த்திய அனர்த்தங்களை தாண்டி எஞ்சி நிற்பவைதான் இன்று நாம் காண்கின்ற பூமியும் அதிலுள்ள உயிரினங்களும்..

முன்சென்ற யுகங்கள் பலவற்றின் முடிவையும் பஞ்சபூதங்களே நிகழ்த்தியுள்ளன...

இறைவனிற்கு நாங்கள் வழங்கியுள்ள சக்தி வடிவங்கள் என்பதும் பஞ்சபூதங்களிலிருந்து பெற்றவைதான்.

ஒரு கடற்கரையில் ஆர அமர்ந்து பாருங்கள்.. பெருங்கடலை ஓயாமல் அள்ளி அள்ளி கரைநோக்கி இறைத்துக் கொண்டிருக்கிறது அலைகள்.. அந்த அலைகள் எதன் வடிவம்?

ஒரு சாதாரண மனிதனால் அல்லது ஒரு மக்கள்கூட்டத்தால் அல்லது பெரும் எந்திரங்களால் கூட இந்த வேலையை எத்தனை நேரம் செய்யமுடியும்?

ஆனால் பூமி உருவாகியதாக- கடல் உருவாகியதாக நம்பப்படும் காலம் தொட்டு இந்த வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யார் மூலம்? இந்த வேலையை செய்யும் ஆற்றலான சக்தி எங்கிருந்து வருகிறது?

ஒரு தீக்குச்சியின் சுவாலை போதும், இந்த பூகோளத்தையே அழித்துவிடலாம் என்றால்..அத்தகைய சக்தி அச்சிறு சுவாலைக்குள் எப்படி சேமிக்கப்பட்டுள்ளது?

வெப்பகாலங்களில் வீட்டில் பயன்படுத்தப்படும் மின்விசிறிகளின் செலவீனமே எம் வருமானத்தை மிஞ்சி செல்கிறது. தென்றல், கொண்டல், கோடை, வாடை என்று வேகத்திற்கேற்ப - திசைக்கேற்ப வெவ்வேறு பெயர்களில் சலிக்காமல் வீசுகிற காற்றிற்கு சக்தி எங்கிருந்து கிடைத்தது?

கைத்தொலைபேசிகளில் அறிவிப்பு சமிக்ஞைகள் வரும் போது அது அதிர்வாக உணரப்படுகிறது. அவ் அதிர்வுகளை கூட சக்தி இழப்பு என்று கருதி நாம் நிறுத்தி வைக்கிறோம்... ஆனால் இந்த முழு உலகையே அதிரவைக்கும் சக்தி-பொறுமையின் சிகரம் என்று சொல்லப்படுகிற பூமிக்கு எங்கிருந்து வருகிறது?

அணைக்கட்டுக்களையே உடைந்தெறிந்து பாயும் மழை வெள்ளம், ஒரு முகிலிற்குள் எப்படி மென்மையாய் பதுங்கியுள்ளது?

இந்த உலகை ஆளும் சக்தி என்பது என்னென்ன வடிவங்களாக எங்கெங்கு சேர்த்து வைக்கப்பட்டுள்ளது என்பதை இப்போது சிந்திக்க முடிகிறதா?

பஞ்சபூதங்களும் சக்தியின் முகவடிவங்களே..

இரண்டு மேகங்கள் உரசும் போது உண்டாகும் மின்னலில் உள்ள சக்தியை கண்டறிந்த பின்தான் விஞ்ஞானிகள் மின்சாரத்தை கண்டறிய முன்னேறினர்.



இவ்வாறாக இந்த பூமியில் மறைந்துள்ள சக்திவடிவங்களை மீட்டெடுப்பது என்பதே இன்று வரை விஞ்ஞானம் விடைதேடிக்கொண்டிருக்கும் பெரிய வினாவாகும்.

மனிதனின் நுண்ணறிவை செயற்கையாக்கி கொள்வதை பெருஞ்சாதனை என்று நகர்கிறோம். அதனிலும் அவசியமானது இயற்கையில் மறைந்துள்ள சக்தியை மீட்டெடுத்து உபயோகிப்பது? எல்லாவற்றையும் தருகிற இயற்கை இந்த உலகம் இயங்க தேவைப்படும் சக்தியை தராதா? பெற்றுக் கொள்ளும் பக்குவம் எம்மிடத்தில் பூரணமாக இல்லை என்பதே உண்மை.

காலங்காலமாய் பூமியின் காலகர்ப்பத்தில் உருவான எரிபொருட்களையே பெருமளவில் நம்பிக் கொண்டு மனிதன் இந்த உலகை இயக்குகிறான். அதன் விளைவாய் பூமியையே அசுத்தமாக்கி, உலகின் அழிவை நோக்கி நாமெல்லாம் விரைந்து கொண்டிருக்கிறோம். இது நாம் இயற்கையின் சக்தி வடிவங்களை இன்னும் ஓரளவேனும் கண்டடையவில்லை என்பதையே காட்டுகிறது. நம் தொழில்நுட்ப வறுமை என்றே இதனை கருத வேண்டும். தொழில்நுடபம் இல்லாமல் இல்லை. இருக்கிறது. ஆனால் முழுமையான பயன்பாட்டிற்கு இன்னும் வெகுதூரம் இருக்கிறது.

இயற்கையின் இந்த சக்தி மூலத்தையே “புதுப்பிக்கத்தக்க ஆற்றல்” (Renewable Energy) என்று விஞ்ஞானம் பெயரிடுகிறது. இந்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் என்பது சூரிய ஒளி, காற்று, மழை, கடல் அலை, புவி வெப்பம் போன்ற புதுப்பிக்கத் தக்க இயற்கை வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்ய முனையும் ஆற்றல் ஆகும்.

இத்தொழில்நுட்பமானது சூரிய ஆற்றல், காற்று ஆற்றல், நீர்மின்சாரம், உயிர்த்திரள் ஆற்றல், உயிரெரிபொருட்கள் என்பவற்றை உள்ளடக்கி அதன் சக்தியை ஜனரஞ்சகபடுத்த எத்தனிக்கிறது. மின்னுருவாக்கம், அறை வெப்பமூட்டல், நீர்ச் சூடாக்கல் அல்லது குளிர்த்தல், போக்குவரத்து, ஊரக மின் தடங்கல் நேர ஆற்றல் பயன்பாடுகள் போன்ற பல முதன்மையான பயன்பாடுகளுக்குப புதுப்பிக்கத்தக்க ஆற்றலை பயன்படுத்த இதுவரை கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் மேலும் புதுபிக்கத்தக்க ஆற்றல் அமைப்புகள் இப்போது மிகவும் சிக்கனமானதாகவும் திறமையானதாகவும் மாறிவருகின்றன. மொத்த ஆற்றல் நுகர்வில் இதன் பங்களிப்பு தொடர்ந்து கூடிக்கொண்டே வருகிறது. நிலக்கரி, எண்ணெயின் நுகர்வின் வளர்ச்சி எதிர் காலத்தில் அளவில் பெரிதும் கட்டுப்பட்டு அதற்கு மாற்றாக பெருமளவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலே பயன்பாட்டில் நிற்கும் என்பது வெளிப்படை.

இலங்கையில் பாய்ந்தோடுகிற மகாவலிமை கொண்ட மகாவலி ஆற்றின் சக்தி கொண்டே முழுநாடும் ஆற்றல் பெருகின்றது என்றால் அது மிகையல்ல. ஒரு நதியின் சக்தி ஒரு நாட்டை இயக்க போதுமானது என்றால் ஐம்பூதங்களின் சக்தியை ஓரளவேனும் பயன்படுத்த முயற்சி செய்தால் நாம் எந்தளவு முன்னோக்கி செல்ல முடியும்?

எல்லாவற்றையும் விட பசுமையான இந்த பூமியை பசுமையாகவே பேணுவது எம் தலைமுறையின் தலையாய கடமையாகும். அதற்கு ஒரே வழி சூழலுக்கு எந்த தீங்கும் இலாத இந்த இயற்கையின் ஆற்றல்களை நாம் நம்வசப்படுத்தி பயன்படுத்திக் கொள்வதுதான். அதற்கான வினைத்திறனான தொழில் நுட்பம் தொடர்ச்சியான வளர்ச்சிப் பாதையில் பயணிக்க வேண்டும். கடந்த வருடம் கற்றுத்தந்த பாடங்களுடன் புதிய வருடத்தை இயற்கையின் புதுப்பி க்கத்தக்க பேரற்றலை பயன்படுத்தும் தொனிப் பொருளில் வரவேற்போம். ஆற்றல் மிகுந்த பசுமையான பூமியை அடுத்த தலைமுறைக்கு பரிசளிப்போம்.





# இலங்கைப் பெருவெள்ளம்: நீர் வடிந்த பின்பும் நீடிக்கும் மனக்காயங்கள் – உளவியல் மீட்சிக்குத் தேவைப்படும் அவசர கவனம்

மு. ஷாம்பவி
இரண்டாம் வருடம்
உளவியல் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

இலங்கையின் பல மாகாணங்களை உலுக்கிய சமீபத்திய வெள்ளப்பெருக்கு, மனித வாழ்வின் அடிப்படையையே ஆட்டம் காண வைத்துள்ளது. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் வீடுகளையும், உடைமைகளையும், சில சமயங்களில் அன்பானவர்களையும் ஒரே இரவில் இழந்தனர். வெள்ளம் வடிந்து, நிவாரணப் பணிகள் ஒருபுறம் நடந்துகொண்டிருந்தாலும், இன்னொருபுறம், பாதிக்கப்பட்ட சமூகங்களின் உளவியல் ஆரோக்கியத்தில் ஏற்பட்டுள்ள ஆழமான சேதங்கள் கண்ணுக்குத் தெரியாத ஒரு பெரும் அச்சுறுத்தலாக நீடிக்கின்றன. அடுத்த பேரிடர் எப்போது வரும் என்ற பாதுகாப்பின்மை உணர்வுடன் போராடும் மனங்களுக்கு அவசர கவனம் தேவைப்படுகிறது.

### பேரதிர்ச்சி மற்றும் உளவியல் வடுக்களின் வடிவம்

ஒரு பெரிய பேரிடரை நேரடியாக எதிர்கொள்வது என்பது மனித மனதிற்கு ஒரு மிகப்பெரிய அதிர்ச்சியாகும். இது உடனடியாகவோ அல்லது வாரங்கள் கழித்தோ அதிர்ச்சிக்கு பிந்தைய மன அழுத்தக் கோளாறாக (PTSD) வெளிப்படுகிறது. இலங்கைப் பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களிடம் காணப்படும் சில தீவிர அறிகுறிகள்:

- மீண்டும் மீண்டும் தோன்றும் காட்சிகள் (Flashbacks): வெள்ளம் வரும்போது ஏற்பட்ட அச்சம், நீரின் இரைச்சல், சேறு மற்றும் ஈரம் நிறைந்த மண் ஆகியவற்றின் வாசனை போன்ற உணர்ச்சித் தூண்டிகள் (Sensory Triggers) மூலம் அந்த பயங்கரமான அனுபவம் மீண்டும் மீண்டும் மனதில் வந்து பீதியைக் கிளப்புதல்.
- மிகுந்த விழிப்புணர்வு (Hyper-vigilance): சாதாரண மழை அல்லது நீரின் சத்தம் கேட்கும்போது ஏற்படும் அளவுக்கு அதிகமான எச்சரிக்கை உணர்வு. இது பாதிக்கப்பட்டவர்களைத் தூங்க விடாமலும், அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட விடாமலும் தடுக்கிறது.
- உயிர் பிழைத்தவர் குற்றவுணர்வு (Survivor's புரடைவ): சிலர் உயிர் தப்பிய நிலையில், மற்றவர்கள் தங்கள் வீடுகளை இழந்தது அல்லது துயரங்களை எதிர்கொண்டது குறித்து தாங்களே குற்றவாளிகள் என நினைத்துக்கொள்வது. இந்த குற்றவுணர்வு மனச்சோர்வை அதிகப்படுத்துகிறது.

இத்தகைய உளவியல் வடுக்கள் நீடிக்க அனுமதிக்கப்பட்டால், அவை நீடித்த மனச்சோர்வு (Chronic Depression), பதட்டம் (Anxiety) மற்றும் உடல்நலப் பிரச்சினைகளாக (சோர்வு, தலைவலி) மாறி, நீண்ட காலத்திற்கு அவர்களின் வாழ்வைச் சீர்குலைக்கும்.

பொருளாதாரப் பாதுகாப்பின்மை என்னும் புதிய மன அழுத்தம்
இலங்கையின் இந்த வெள்ளப் பாதிப்பில், உளவியல் அழுத்தத்தின் முக்கிய தூண்டுகோலாகப் பொருளாதார இழப்பு உள்ளது. இது வெறும் பணம் அல்லது உடைமை இழப்பு மட்டுமல்லஅது ஒருவரின் சுயமரியாதை மற்றும் சமூக அந்தஸ்து இழப்பாகவும் பார்க்கப்படுகிறது.

- வாழ்வாதாரம் சிதைவு: வெள்ளம், விவசாய நிலங்களை அழித்ததாலும், மீன்பிடிப் படகுகள் மற்றும் கருவிகளைச் சேதப்படுத்தியதாலும், விவசாயிகள் மற்றும் மீனவர்கள் தங்கள் எதிர்காலம் குறித்த நம்பிக்கையை இழக்கின்றனர். ஒரு குடும்பத் தலைவன் (ஆண் அல்லது பெண்) தன் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாது என்ற இயலாமை உணர்வுக்கு ஆளாகி, கடும் மன அழுத்தத்திற்கு உள்ளாகிறார்.

• கடன் சுமை மற்றும் எதிர்கால நிச்சயமற்ற தன்மை: இலங்கையின் தற்போதைய பொருளாதாரச் சூழலில், பலர் ஏற்கனவே கடனில் உள்ளனர். வெள்ளத்தால் தங்கள் சொத்துக்களை இழந்த பிறகு, இந்தக் கடனை எப்படி அடைப்பது என்ற கவலை அவர்களைத் தற்கொலை எண்ணங்களை நோக்கித் தள்ளும் அபாயம் உள்ளது. அரசாங்கத்தின் உதவிகளை நம்பியிருக்கும் நிலை, அவர்களின் கட்டுப்பாட்டை இழந்த உணர்வை மேலும் வலுப்படுத்துகிறது.

• அடையாளச் சிக்கல்: சொந்தமாக உழைத்து வாழும் பழக்கம் கொண்ட பலர், தற்போது நிவாரண உதவிகளுக்காகக் காத்திருக்கும் நிலைக்குத் தள்ளப்படுவது, தாங்கள் "ஊனமுற்றவர்கள்" அல்லது 'சுமை' என்ற தவறான உணர்வை ஏற்படுத்துகிறது.

## சமூகக் குழுக்களின் மீதான சமமற்ற தாக்கம்

வெள்ளத்தின் உளவியல் தாக்கம் அனைத்துத் தரப்பினரையும் ஒரே அளவில் பாதிப்பதில்லை. குழந்தைகளுக்கும், பெண்களுக்கும், முதியவர்களுக்கும் தனித்துவமான சவால்கள் உள்ளன, அவை தனிப்பட்ட கவனிப்பைக் கோருகின்றன: குழந்தைகள் மற்றும் பதின்ம வயதினர்:பின்வாங்குதல் (Regression): சிறிய குழந்தைகள் படுக்கையில் சிறுநீர் கழித்தல் அல்லது பேசுவதை நிறுத்துதல் போன்ற இயல்பற்ற நடத்தைகளை மீண்டும் வெளிப்படுத்தலாம்.
கல்விச் சுமை: பள்ளிகள் மூடப்படுதல், புத்தகங்கள் இழப்பு மற்றும் இடப்பெயர்ச்சி காரணமாகக் கல்வி தடைபடுவது, அவர்களின் எதிர்காலம் குறித்த கவலையை அதிகரிக்கிறது.

பெண்கள் மற்றும் தாய்மார்கள்: இரட்டைச் சுமை: வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களைச் சரிசெய்வது, குடும்பத்தை நிர்வகிப்பது மற்றும் முகாம்களில் வசிக்கும் சூழலில் தனியுரிமை இழப்பு ஆகிய இரட்டைச் சுமையுடன் பெண்கள் போராடுகின்றனர்.

பாலியல் வன்முறை அச்சுறுத்தல்: முகாம்கள் மற்றும் தற்காலிகக் குடியிருப்புகளில் தனியுரிமை குறைவதால், பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான மற்றும் குடும்ப வன்முறைகள் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. இந்தச் சூழ்நிலையில், பெண்கள் தங்கள் அச்சங்களையும் கவலைகளையும் வெளிப்படையாகப் பேச தயங்கலாம்.

முதியோர்: தனிமையும் இழப்பும்: முதியோர்கள் தங்கள் வாழ்நாள் சேகரிப்புகளையும், உணர்வுபூர்வமான மதிப்புக் கொண்ட பொருட்களையும் (புகைப்படங்கள், பாரம்பரியப் பொருள்கள்) இழந்ததால் ஏற்படும் சோகம் மிகக் கடுமையானது. தங்கள் குடும்பத்தினருக்குத் தாங்கள் சுமையாகிவிட்டோமோ என்ற எண்ணம் தனிமையையும் மனச்சோர்வையும் ஏற்படுத்துகிறது.

மீட்சிப் பாதை: உளவியல் ஆதரவின் அவசரத் தேவை இலங்கையின் பேரிடர் மேலாண்மை கட்டமைப்பில், உளவியல் மீட்பு என்பது அடிப்படைத் தேவையாகக் கருதப்பட வேண்டும். இது ஒரு நீண்டகால முதலீடாகும்.

• அவசர உளவியல் முதலுதவி (PFA) மற்றும் நடமாடும் மனநல சேவை: வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கு உடனடியாக நடமாடும் மனநலக் குழுக்களை அனுப்பி, அங்கே தங்கியுள்ள மக்களுக்கு ஆதரவு அளித்தல். இந்தச் சேவைகள் உணர்வுப்பூர்வமான தேவைகளைக் கண்டறிந்து, தொழில்முறை சிகிச்சைக்கு அவர்களைப் பரிந்துரைக்க வேண்டும்.

• சமூக அடிப்படையிலான மீட்சி: உள்ளூர் கோயில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் மற்றும் கிராமத் தலைவர்கள் மூலம் பாரம்பரிய மற்றும் கலாச்சார நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஆறுதல் அளிக்கும் ஆதரவுக் குழுக்களை உருவாக்குதல். இலங்கையின் கலாச்சாரப் பின்னணியில், மத குருமார்களின் பங்கு மக்களை மீண்டும் நம்பிக்கைக்குத் திரும்புவதற்கு மிகவும் உதவும்.

• குழந்தைகளுக்கான சிறப்பு சிகிச்சை: விளையாட்டு அடிப்படையிலான சிகிச்சைகள் (Play Therapy) மற்றும் பள்ளி சார்ந்த மனநலத் திட்டங்கள் மூலம் குழந்தைகளுக்கு அவர்களின் உணர்ச்சிகளைப் பாதுகாப்பான முறையில் வெளிப்படுத்த உதவுதல்.

• வாழ்வாதார மீட்சி மூலம் மனநல மேம்பாடு: வெறும் ஆலோசனை வழங்குவது மட்டும் போதாது தொழில் ரீதியான பயிற்சிகள், சிறு கடன் உதவிகள் மற்றும் விவசாயத்தை மீட்டெடுப்பதற்கான ஆதரவு ஆகியவை பொருளாதார ரீதியான





கட்டுப்பாட்டை அவர்களுக்குத் திரும்பக் கொடுத்து, உளவியல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்.

• நிரந்தர உளவியல் கட்டமைப்பு: எதிர்காலப் பேரிடர்களைச் சமாளிக்க, ஒவ்வொரு மாவட்டத்திலும் பேரிடர் சார்ந்த மனநலப் பிரிவுகளை நிறுவி, நீண்ட கால உளவியல் சிகிச்சையை மலிவான விலையில் அல்லது இலவசமாகக் கிடைக்கச் செய்தல்.

இலங்கை ஒரு மீண்டெழும் வரலாற்றைக் கொண்ட நாடு. சுனாமி மற்றும் உள்நாட்டுப் போரின் துயரங்களில் இருந்து மீண்டு வந்த அனுபவம், இந்த வெள்ளப் பாதிப்பில் இருந்தும் மீள அவர்களுக்கு உதவும். ஆனால், அது ஒவ்வொரு தனிநபரின் மன ஆரோக்கியத்தைக் கவனித்துக்கொள்வதன் மூலமே சாத்தியமாகும்.

உளவியல் காயங்களை ஆற்றுவதற்கு நாம் அனைவரும் — அரசாங்கம், தொண்டு நிறுவனங்கள், மற்றும் பொதுச் சமூகம் — இணைந்து செயலாற்ற வேண்டும். இப்போது நாம் கொடுக்கும் அக்கறை, வருங்கால இலங்கையின் உளவியல் ரீதியான வலுவான அடித்தளத்தை உருவாக்கும்.





# தமிழ் பழமொழிகள் மற்றும் மனித நடத்தை உளவியல

நடராசா கோபிராம்
உளவியல்சிறப்புக்கலைமாணவன்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

மனித சமூகத்தின் அனுபவங்களும் சிந்தனைகளும் சேர்ந்து உருவாக்கிய ஞானச் சொற்றொடர்கள் தான் பழமொழிகள். அவை ஒரு மொழியின் அளவுகோல் மட்டுமல்ல, அந்த மக்களின் வாழ்க்கை முறை, மனநிலை, உளவியல் உருவாக்கங்கள் அனைத்தையும் தன்னுள் சுமக்கும் சிறுகோள்கள். தமிழ் பழமொழிகள் அதற்குச் சிறந்த உதாரணங்கள் ஏனெனில் தமிழர் வாழ்ந்து கண்ட நூற்றாண்டுகளின் அனுபவம், ஆராய்வு, மனித இயல்பின் வேர்களைத் தொட்ட நுட்பப்பார்வை ஆகியவற்றை மிகச்சுருக்கமாகவும் உணர்ச்சி நிறைந்தவையாகவும் வெளிப்படுத்துகின்றன.

உளவியல் என்பது மனிதனின் எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ளும் அறிவியல். இந்த இரண்டு கோணங்களையும் இணைக்கும் போது, தமிழ் பழமொழிகள் மனித நடத்தை உருவாகும் விதங்களை மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன. பழைய தமிழ் சமூகத்திற்கு உளவியல் என்ற சொல்லறிவு அவ்வளவாக இல்லாவிட்டாலும், நடத்தையில் விளையும் மாற்றங்கள், உணர்வுகளின் தாக்கம், சமூக அழுத்தம், பயம், விருப்பம், போட்டி, எதிர்பார்ப்பு ஆகிய

அனைத்தையும் அவர்கள் நுட்பமாக உணர்ந்து, வாழ்வியல் அறிவாகப் பழமொழிகளாக பதித்து விட்டனர்.

“ஆடு முடியாத இடத்தில் ஆமை கூட முடியும்” என்ற பழமொழி மனித நடத்தை உளவியலில் ‘self-efficacy’ எனப்படும் தன்னம்பிக்கை கொள்கையை பிரதிபலிக்கிறது. கடினமான சூழ்நிலைகளிலும் முயற்சியின் தொடர்ச்சியால் கிடைக்கும் வெற்றியை இது சுட்டிக்காட்டுகிறது. “ஆமை மெதுவாகச் செல்வது” என்ற கருத்து மட்டும் இல்லை நிதானமாக, சீரான முயற்சி ஒருவரின் மனவளத்தை உருவாக்கி நடத்தை மாற்றத்தையும் ஏற்படுத்தும்.

இது உளவியலில் ‘growth mindset’ எனப்படும் மனநிலைக்கும் நெருங்கிய தொடர்பு கொண்டது. அதேபோல், “அவசரப் பட்டால் தவறுப் படுவர்” என்ற பழமொழி மனித முடிவெடுப்பில் ஏற்படும் விரைவு–பிழை தொடர்பை விளக்குகிறது. Cognitive Psychology கூறும் ‘heuristics’ காரணமாக வேகமான முடிவுகள் தவறுகளுக்குச் செயல்படுத்தும் என்ற உளவியல் உண்மையை தமிழர் காலத்துக்கு முன்பே பழமொழியாக்கி விட்டனர்.

சமூக உளவியல் கூறும் முக்கியக் கோட்பாடுகளில் ஒன்று ‘conformity’ — பிறரின் நடத்தை, எண்ணம் ஆகியவற்றை பின்பற்றும் மனித இயல்பு. இதற்கு இணையான தமிழ் பழமொழி “எவர் கூட சென்றாலும் எச்சரிக்கையாகச் செல்”. சமூகம் மனிதர்கள் மீது அழுத்தம் கொடுக்கலாம் தனி நபரின் தீர்மானம் விட்டுவிடப்படலாம் ஆனால் தன்னாட்சி மற்றும் முன் விவேகம் அவசியம் என உளவியல் நோக்கத்தைக் கொண்ட எச்சரிக்கை இப்பழமொழியில் உள்ளது. “காக்கைக்கும் தன்குஞ்சு பொன்னுக் குஞ்சு” என்பது மனிதனின் உணர்ச்சி பாங்கான நெருக்கம் bias-I (emotional bias) மிக அழகாகச் சொல்வது.

ஒருவர் நேசிக்கும் பொருளோ மனிதரோ எந்த அளவுக்கு குறைகள் இருந்தாலும், அவரைக் குறைவின்றி, மிகைப்படுத்தி மதிப்பிடும் மனவியல் இயக்கம் இதில் பிரதிபலிக்கிறது. இது Parental affection bias in-group favoritism போன்ற உளவியல் கோட்பாடுகளோடு இணைந்திருக்கிறது.

மனித உறவுகள், சமூக மரபுகள், ஒத்துழைப்பு – இவை அனைத்தும் நடத்தையை தீர்மானிக்கும் முக்கிய காரணிகள். “ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” என்ற பழமொழி சமூக உளவியலில் உள்ள ‘collective efficacy’ அல்லது குழு வலிமை கோட்பாட்டின் சுருக்கமான வடிவம். மனிதர்கள் தனியாக செய்ய முடியாத செயல்களை குழுவாகச் செய்ய முடியும், சமூக ஆதரவு மனநலத்திற்கும் அவசியம் என்பது உளவியலில் பேசப்படுகிறது. தமிழர் அதை மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொன்னனர். அதேபோல், “எடுப்பதற்கு முன் எசமான் சிந்திக்க வேண்டும்“ என்ற சொல்லில் மனித முடிவெடுப்பில் ஏற்படும் முன்பதிவு மற்றும் முன்னறிவிப்பு முக்கியத்துவம் உள்ளது. Cognitive planning என்பது உளவியலில் ஒரு முக்கியமான பகுதி மனிதன் செயலுக்கு முன் அதை மனதில் வரைந்து பார்க்க வேண்டும் என்பதே இதன் சாரம்.

மனித உணர்ச்சிகள் நடத்தையை மிக வலுவாக கட்டுப்படுத்துகின்றன. “அறிவு ஒளி, கோபம் இருள்” என்ற பழமொழி உணர்ச்சி கட்டுப்பாட்டின் உளவியலை வெளிப்படுத்துகிறது. கோபம் வரும் போது prefrontal cortex செயலிழந்து impulsive actions அதிகரிக்கும் என்ற நவீன உளவியல் விளக்கம் தமிழரின் பழமொழியில் ஏற்கனவே பதிந்துள்ளது. இதேபோல், “அன்பு செய்தால் அன்பே பெருகும்” என்பது social psychology கூறும் reciprocity principle- முழுமையாக பிரதிபலிக்கிறது . ஒருவர் வழங்கும் அன்பு, கவனம், பாசம் அவருக்கு மீண்டும் அதிகரித்து வரும். இது மனித தொடர்புகளை வலுப்படுத்தும் மிகப் பெரிய உளவியல் அம்சம்.

பழமொழிகளில் மறைபொருள் கொண்ட நுண்ணுணர்வு உள்ளது. “உழுதவன் கேழ்வரகு உண்ண மாட்டான்” என்பது மனித மனதில் ஏற்படும் guilt-conditioning-I குறிக்கிறது. ஒருவர் அதிக உழைப்பைச் செய்யும்போது அதன் பலனை அனுபவிக்க முடியாமல் இருக்கும் உளவியல் conflict இதன் பின்னணியில் உள்ளது. மனம் பல நேரங்களில் தன்னுடைய தியாகத்தைப் பெரிதாகக் கருதிவிட்டு, பலனை அனுபவிக்க குற்ற உணர்வு ஏற்படுத்தும். இது 'self-sabotage behaviour' என உளவியல் உலகில் விவாதிக்கப்படுகிறது. அதேபோல், “தைரியம் உள்ளவன் தன் கயிற்றைக் கொண்டு பாம்பை எடுத்தான்” என்பது மனிதனின் self-confidence மற்றும் risk-handling capacity ஆகியவற்றை எடுத்துரைக்கும் சிறந்த உவமை.





சுற்றுப்புற சூழல் மனித நடத்தையை வடிவமைக்கிறது என்பதை social psychology வலியுறுத்துகிறது. இதையே தமிழ் பழமொழி “சூழ்நிலை தோற்றமளிக்கும் தீர்மானம்” எனும் எண்ணத்துடன் முன்வைக்கிறது. “நீரில் வளரும் தாவரமும், மணலில் வளரும் தாவரமும் வேறு வேறு” என்ற அடிப்படையில் மனிதர்களின் சூழ்நிலை பெரிதும் அவர்களின் நடத்தை, முடிவுகள், சிந்தனைகள் அனைத்தையும் மாற்றுகிறது. இது Behavioural Psychology இல் உள்ள “environment shapes behaviour” என்ற கோட்பாட்டுடன் நேரடி ஒற்றுமை கொண்டது.

பிறரைப் பற்றிய கருத்து உருவாகும் போது மனித மனம் எவ்வாறு பிழைகள் செய்கிறது என்பதை cognitive psychology விரிவாகக் கூறுகிறது. “வெளி புறம் பார்த்து மதிப்பிடாதே” என்ற தமிழ் பழமொழி, மனிதர்கள் வெளிப்புற தோற்றத்தின் அடிப்படையில் செய்யும் judgement errors-ஐ மிகத் துல்லியமாகப் பேசுகிறது. இது ‘first impression bias’ ‘halo effect’ ஆகிய உளவியல் கருத்துகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. “மௌனம் பொன்னானது” என்ற பழமொழியில் மனிதன் பேசுவதற்கு முன் சிந்திப்பது, unnecessary conflict-ஐ தவிர்ப்பது போன்ற self-regulation உளவியல் கூறுகள் தெளிவாகத் தெரிகின்றன.

பயமும் நம்பிக்கையும் மனித நடத்தையை மிக அதிகமாக கட்டுப்படுத்தும் ,ரண்டு உணர்ச்சிகள். “பயம் என்பது பாதிப் பிரச்சினை” என்று தமிழர் கூறியிருப்பது anxiety psychology-யின் மையக் கருத்தே. பயம் காரணமாக மனிதன் செய்ய வேண்டிய செயல்களைத் தவிர்க்கலாம், தவறான முடிவுகளை எடுக்கலாம், அல்லது உண்மையான சிக்கலை மேலும் பெரிதாக்கிக் காணலாம். அதே நேரத்தில், “உழைப்புக்கு ஓய்வு கிடைக்குமே” என்ற நம்பிக்கையை ஊட்டும் பழமொழி behavior therapy-யின் reinforcement principle-ஐ நினைவூட்டுகிறது. நல்ல செயல்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் என்பதே மனித மனத்தை முன்னேற்றும் சக்தி.

மொத்தத்தில், தமிழ் பழமொழிகள் மனித நடத்தை உளவியலைப் புரிந்து கொள்ளும் சிறந்த தளமாக உள்ளது. ஒவ்வொரு பழமொழியும் மனித மனத்தின் ஒரு பரிமாணத்தை வெளிப்படுத்துகிறது. பயம், அன்பு, பாசம், நம்பிக்கை, செயலுணர்வு, தவறுகள், உறவுகள், சமூக ஒத்துழைப்பு, முடிவெடுப்பு, தன்னம்பிக்கை, சூழ்நிலை தாக்கம், உணர்ச்சி கட்டுப்பாடு, அறிவார்ந்த சிந்தனை போன்ற அநேக உளவியல் அம்சங்கள் அனைத்தும் இதில் நிறைந்திருக்கின்றன. மொழியிலும் மனத்திலும் வாழும் ஒரு மக்களின் கூட்டு அறிவு இவை.

நவீன உளவியல் இன்று ஆய்வகங்களில் ஆராய்ந்து வரும் உண்மைகளை, தமிழர் காலத்துக்கு முன்னே வாழ்க்கைப் பயணத்தில் கண்டறிந்து பழமொழிகளாகச் சொல்லிப் பரிமாறியிருக்கின்றனர். மனிதனின் நடத்தை எப்படிப் பிறக்கிறது, எப்படித் திசை மாறுகிறது, எப்படிச் சீராகிறது என்பதை அறிய தமிழ் பழமொழிகள் ஒரு உளவியல் நூலாகவே வாசிக்க முடியும். இதனால், தமிழ் மொழி என்பது சும்மா ஒரு மொழி அல்ல அது மனித மனத்தின் ஆழத்தைத் தொட்ட ஒரு உயிருள்ள உளவியல் களஞ்சியமாகும்.




அபயம்
இரகசியம் பேணும்
இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை
071 071 2345
மனநெருக்கீடுகளில்
இருப்பவர்களுக்கு உடனடி தொலைபேசி
வைத்திய ஆலோசனை வழங்கும் சேவை
துறை சார் மருத்துவர்களும் ,
குழுவினரும் உங்களை ஆறுதல் படுத்தி
தீர்வு காண்பதற்கு / வழிகாட்டுவதற்கு
தயாராக உள்ளனர் .
ஒரு நாளில் (24 மணி நேர இரவு பகல் சேவை)
எந்தநேரமும் ஒரு வைத்தியரை உடனடியாக
தொடர்பு கொள்ளலாம்
மனநெருக்கடிகளுக்கு உள்ளானவர்களை
காண்பவர்கள் இத் தொலைபேசி சேவையை
பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்.
தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் அனைத்தும்
இரகசியமாக பேணப்படும்
ABAYAM
அபயம்
அபயம் - கல்வி மற்றும் உடல் நலம் சார்ந்த அறக்கட்டளை அமைப்பு

# அவசரக்கார சாமியாரும் அந்த இரண்டு மரங்களும்!



ஒரு அடர்ந்த காட்டின் ஓரத்தில் ஒரு சிறிய ஆசிரமம் இருந்தது. அங்கே இரண்டு சீடர்கள் தவம் செய்து கொண்டிருந்தார்கள். ஒருவர் பெயர் சோம்நாத், இன்னொருவர் பெயர் விவேக். சோம்நாத் மிகவும் துடிப்பானவர், எதற்கும் அவசரப்படுபவர். ”எப்படியாவது சீக்கிரம் கடவுளைப் பார்த்துவிட வேண்டும், மோட்சம் அடைந்துவிட வேண்டும்” என்பதே அவரது லட்சியம். விவேக் அதற்கு நேர்மாறானவர். அமைதியாக, ஒவ்வொரு செயலையும் ரசித்துச் செய்பவர்.

ஒருநாள் அந்த வழியாக தேவலோக முனிவரான நாரதர் நாராயண நாமத்தைப் பாடிக்கொண்டு நடந்து வந்தார். இதைப் பார்த்த சோம்நாத் ஓடிப்போய் அவர் காலில் விழுந்தார்.

”சுவாமி, நீங்கள் வைகுண்டம் தானே போகிறீர்கள்? போகும்போது எனக்காக ஒரு உதவி செய்ய வேண்டும். நான் பல ஆண்டுகளாகக் கடுமையாகத் தவம் செய்கிறேன். இன்னும் எத்தனை பிறவிகள் எடுத்தால் எனக்குக் கடவுளின் தரிசனம் கிடைக்கும் என்று அவரிடம் கேட்டு வந்து சொல்லுங்களேன்!” என்றார் சோம்நாத்.

அருகில் இருந்த விவேக் எதையும் கேட்கவில்லை, ஒரு புன்னகையோடு நாரதரை வணங்கினார். நாரதரும் ”சரி, கேட்டுச் சொல்கிறேன்” என்று கூறி மறைந்தார். சில மாதங்கள் கழித்து நாரதர் மீண்டும் அதே வழியே வந்தார். சோம்நாத் ஆவலோடு ஓடி வந்தார்.

”சுவாமி! கடவுள் என்ன சொன்னார்? இன்னும் ஒரு பிறவிதானே?” என்று ஆவலோடு கேட்டார். நாரதர் சற்றே தயங்கிவிட்டுச் சொன்னார், ”சோம்நாத், நான் கடவுளிடம் கேட்டேன். அவர் நீ இப்போது அமர்ந்திருக்கிறாயே, இந்த புளிய மரத்தில் எத்தனை இலைகள் இருக்கின்றனவோ, அத்தனை பிறவிகள் நீ எடுக்க வேண்டும் என்று சொன்னார்.” இதை கேட்டதும் சோம்நாத் கோபத்தில் கத்தினார்.

"என்னது? அத்தனை கோடி இலைகளா? அத்தனை பிறவிகளா? நான் இவ்வளவு கடுமையாகத் தவம் இருந்தும் எனக்குக் கிடைத்த பலன் இதுதானா? இது அநீதி! நான் இன்று முதல் தவத்தையே கைவிடுகிறேன்!" என்று தனது தவம் செய்யும் கோலைத் தூக்கி எறிந்துவிட்டுப் புலம்பிக்கொண்டே ஊருக்குள் ஓடினார். அடுத்து நாரதர் விவேக்கைப் பார்த்தார். விவேக் ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில் அமர்ந்திருந்தார்.

நாரதர் விவேக்கிடம், "விவேக், உன்னைப் பற்றியும் கேட்டேன். நீ அமர்ந்திருக்கும் இந்த ஆலமரத்தில் எத்தனை இலைகள் இருக்கிறதோ, அத்தனை பிறவிகள் நீ எடுக்க வேண்டுமாம்" என்றார்.

இதைச் சொன்னவுடன் விவேக் துள்ளிக் குதித்து ஆனந்தக் கூத்தாட ஆரம்பித்தார். அவர் கண்களில் கண்ணீர் வழிந்தது. "ஆகா! என்ன பாக்கியம்! இந்த உலகத்தில் எவ்வளவோ மரங்கள் இருக்கின்றன. அதில் இந்த ஒரு மரத்தின் இலைகளின் எண்ணிக்கையில் எனக்குக் கடவுள் தரிசனம் கிடைத்துவிடுமா? நிச்சயம் கிடைக்குமா? நான் எவ்வளவு கொடுத்து வைத்தவன்!" என்று மகிழ்ச்சியில் பாடி ஆடினார்.

அடுத்த வினாடியே... ஒரு பேரொளி தோன்றியது. கடவுள் நேரில் தோன்றி விவேக்கிற்குத் தரிசனம் தந்து, அவருக்கு முக்தியை அளித்தார். நாரதருக்கு ஒரே குழப்பம். அவர் கடவுளிடம் கேட்டார், "இறைவா, கோடி இலைகள் கொண்ட மரத்தைக் காட்டி அத்தனை பிறவிகள் என்றீர்கள். ஆனால், இப்போது ஒரே நொடியில் அவருக்கு முக்தி கொடுத்துவிட்டீர்களே? இது உங்கள் கணக்கிற்கு மாறானது அல்லவா?"

கடவுள் சிரித்துக்கொண்டே சொன்னார்:
"நாரதரே, கணக்கு என்பது காலத்தைப் பொறுத்தது அல்ல் மனநிலையைப் பொறுத்தது. சோம்நாத் "எப்போது கிடைக்கும்?" என்ற இலக்கிலேயே கவனம் செலுத்தினான். அவனுக்குப் பயணம் கசப்பாக இருந்தது. ஆனால் விவேக், "நிச்சயம் கிடைக்கும்" என்ற நம்பிக்கையில் அந்தப் பயணத்தையே (தவத்தையே) கொண்டாடத் தொடங்கினான். எவன் ஒருவன் காத்திருப்பதைக் கூட ரசித்துச் செய்கிறானோ, அவனுக்குக் காலம் ஒரு தடையே அல்ல. அவனது அந்தப் பொறுமையும், பக்தியுமே அவனது கோடி பிறவிக் கடனை ஒரே நொடியில் தீர்த்துவிட்டது."



# நாக்கின் வலிமை

ஒரு உறுப்பை வைத்து ஒருவரின் பண்பை எடை போட முடியுமென்றால் அது நாக்கு மட்டும் தான். நாவின் வன்மையால் இவ்வையத்தில் வாழ்ந்தோரும் உண்டு. வீழ்ந்தோரும் உண்டு. எனவே நாக்கை நமது கட்டுப்பாட்டுக்குள் எப்பொழுதும் வைத்திருக்க வேண்டியது மிக அவசியமாகும்.தேவையற்றப் பேச்சை எப்போதும், யாரிடமும் பேசாமல் இருப்பது நல்லது. பேசும் போது நன்றாக சிந்தனை செய்து பேசினால் நன்மையே விளையும்.

யாரிடமும், அவர் மனம் புண்படும்படி பேசக்கூடாது. அவ்வாறு பேசினால், அதற்கான துன்பம் வந்து சேரும். நாக்கை அடக்கி ஆளக் கற்றுக் கொண்டால், உடலுக்கும் மனதுக்கும் நல்லது.

பேரரசன் ஒருவனிடம், வலிமை மிக்க யானை ஒன்று இருந்தது. போர்க்களம் செல்லும் போதெல்லாம் அதன் உடல் முழுவதும், வாட்கள் நிறைந்த கவசங்களால் மூடப்பட்டிருக்கும். அதன் வாலிலும் இரும்புக் குண்டு ஒன்று இணைக்கப் பட்டிருக்கும். போர் சமயங்களில், அந்த யானையின் துதிக்கையில் அம்பு படாமல் இருக்க, துதிக்கையை நன்றாகச் சுற்றி வைத்துக் கொள்வதற்குப் பழக்கி இருந்தான் பாகன்.



ஒரு நாள் போர்க்களத்தில் அரச யானை புகுந்து எதிரிப் படைக்குப் பேரழிவைத் தந்தது. அதன் அங்கங்களில் பொருத்தப்பட்டு இருந்த ஆயுதங்களில் ஒன்று கீழே விழுந்ததும், அதை எடுக்க, அதுவரை வளைத்து வைத்து இருந்த துதிக்கையை நீட்டியது யானை.

இதைக் கண்ட பாகன், துதிக்கையின் மீது எதிரிகள் ஈட்டியை எறிவதற்குள் விரைவாகக் களத்தில் இருந்து அந்த யானையை வெளியேற்றிக் கொண்டு வந்தான். அரண்மனையில் அரசனைச் சந்தித்த பாகன், "அரசே, நேற்றைய போரில் நமது யானை, போர்க்களத்தில் சுருட்டி வைத்து இருந்த தனது துதிக்கையை வெளியே நீட்டி விட்டது. இனி அது போருக்குப் பயன்படாது" என்றான்.

அரசனும், அந்த யானையை இனி போரில் பயன்படுத்த வேண்டாம்" என்று சொல்லி விட்டார். மனிதர்கள் தங்கள் நாவை அடக்கும் வரையில் தான் நன்மை அடைவார்கள்.

துதிக்கையைச் சுருட்டி வைக்கும் வரை தான் யானைக்குப் பாதுகாப்பு இருக்கும். தேவையில்லாத இடங்களில் துதிக்கையை சுருட்டி வைத்துக் கொள்ளும் யானையைப் போல, அவசியம் இல்லாத இடங்களில், தங்களது நாவைக் கட்டுப்படுத்த வேண்டும்.



நாக்கின் நீளம் மூன்று அங்குலம் தான்... ஆனால் அது ஆறடி மனிதனையும் கொன்று விடும். வெறுப்பிலும் கோபத்திலும் மகிழ்ச்சியில் கூட வார்த்தைகளை அளந்துப் பேசுங்கள். அது நமக்குத் திரும்பி வரும் போது எல்லாமே மாறி விடும்.

# அரும்பணியாற்றிய அமரர் லேடி இராமநாதன் அம்மையாருக்கு உருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது




யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியின் வளர்ச்சியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக, கல்லூரியின் முன்னாள் அதிபரும் மேலாளருமான லேடி லீலாவதி இராமநாதன் அவர்களின் உருவச்சிலை திறப்பு விழா 18-12-2025 வியாழக்கிழமை அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். கல்லூரியின் பழைய மாணவனும், அகில இலங்கை இந்து மாமன்றத் துணைத் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் கலந்துகொண்டு உருவச்சிலையைத் திறந்து வைத்து நினைவுப் பேருரையையும் நிகழ்த்தினார். இலங்கையின் கடந்த நூற்றாண்டு கால வரலாற்றில் தமிழர்கள் பெருமையுடன் தெரிந்து வைத்திருக்க வேண்டிய விடயங்கள் பலவற்றை இந்த நாற்பது நிமிட பேச்சில் அறிந்து கொள்ள முடியும். இவ்வளவு விடயங்களையும் வாசித்து, ஆராய்ந்து, நினைவில் வைத்து பேச ஈழத்தில் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் இருப்பது தவப் பயன். எங்கள் வரலாற்றையும் பெருமைகளையும் இயன்றவரை அடுத்த தலைமுறைக்கு கடத்தும் மிகப்பெரிய பணியை தொடர்ச்சியாக செய்துவரும் ஐயா அவர்களுக்கு நீண்ட ஆயுளை ஆண்டவன் அளிக்க அனைவரும் பிரார்த்திப்போம்.

இராமநாதன் கல்லூரி வளாகத்தில் இராமநாதன் தம்பதிகள் வசித்த வரலாற்றுச் சிறப்புமிக்க இல்லத்திற்கு முன்பாக இந்த உருவச்சிலை நிறுவப்பட்டது. கல்லூரியின் பழைய மாணவிகளின் மிகுந்த முயற்சியினாலும், பங்களிப்பினாலும் லேடி இராமநாதன் அவர்களின் அரும்பணிகளுக்கு நன்றிக்கடன் செலுத்தும் வகையில் இந்தச் சிலை உருவாக்கப்பட்டிருந்தது.




1909ஆம் ஆண்டு முதல் 1953ஆம் ஆண்டு வரை இராமநாதன் கல்லூரி வளாகத்திலேயே தங்கியிருந்து, இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி மற்றும் இராமநாதன் சைவப் பெண் ஆசிரிய கலாசாலை ஆகியவற்றின் மேலாளராகவும், அதிபராகவும் லேடி இராமநாதன் அரும்பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணம் சைவ மங்கையர் கழகத்தின் ஸ்தாபகராகவும் தலைவராகவும் இருந்து அவர் ஆற்றிய கல்வி மற்றும் சமூகப் பணிகள் இவ்விழாவில் நன்றியுடன் நினைவு கூறப்பட்டன.

இவ்விழாவின் மற்றுமொரு சிறப்பம்சமாக, கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் பதிப்பாசிரியத்துவத்தில் உருவான ”கர்மயோகி லேடி இராமநாதன்” எனும் சிறப்பு மலரும் இதன்போது வெளியிட்டு வைக்கப்பட்டது.

அமரர்கள் லீலாவதி இராமநாதன் மற்றும் சேர் பொன் இராமநாதன் ஆகியோர் இந்த மண்ணில் மக்களுக்காக ஆற்றிய பணிகளை நன்றியோடு நினைவு கூர வேண்டிய நேரம் இது.





# இலங்கையில் பேரிடர் மேலாண்மை

சரவணன் லக்ஷ்ஹரன்,
மெய்யியல் துறை,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

இலங்கையில் பேரிடர்கள் பல்வேறு வடிவங்களில் தோன்றி மக்களின் வாழ்வாதாரத்தை பாதித்து வருகின்றன. அரசியல் போராட்டங்கள், பொருளாதார நெருக்கடிகள், பயங்கரவாத தாக்குதல்கள், கொவிட்-19 போன்ற தொற்று நோய்கள் மட்டுமல்லாமல், இயற்கை சீற்றங்களான வெள்ளம், மண்சரிவு, இடி-மின்னல், சுனாமி போன்றவையும் உயிரிழப்புகளையும் உடைமை இழப்புகளையும் ஏற்படுத்தி வருகின்றன. இ,த்தகைய பேரிடர்களின் போது அரசாங்கம், தொண்டு நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் சாதாரண மக்கள் ஒன்றிணைந்து உதவிகளை வழங்கி மனிதநேயத்தை வெளிப்படுத்துகின்றனர்.

எனினும், பேரிடர் முகாமைத்துவத்தில் ஏற்படும் குறைபாடுகள் மக்களின் துன்பத்தை அதிகரிக்கச் செய்கின்றன.சுழற்காற்று தித்வா நவம்பர் 28 ஆம் தேதி இலங்கையைத் தாக்கியதன் விளைவாக, பரவலான மண்சரிவுகள் மற்றும் வெள்ளப் பேரழிவு ஏற்பட்டு, நாட்டின் கடந்த 20 ஆண்டுகளின் மோசமான வெள்ள நிலைமைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அனைத்து 25 மாவட்டங்களிலும் சுமார் 22 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

643 பேர் உயிரிழந்ததாக பதிவானது, மேலும் 183 பேர் இன்னும் காணாமல் போயுள்ளனர். 100,000 க்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ சேதமடைந்துள்ளன, அவசரகால உச்சத்தில் 2.33 லட்சம் பேர் இடம்பெயர்ந்த நிலையில், டிசம்பர் 15 நிலவரப்படி இன்னும் சுமார் 70,000 பேர் இடம்பெயர்ந்த நிலையிலேயே இருக்கின்றனர்.

நாட்டில் 12 லட்சம் மக்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுகிறது, இவர்களில் மிகவும் பாதிக்கப்பட்ட 6.58 லட்சம் பேருக்கு உதவி செய்வதே இலக்காக உள்ளதுடன் ஐக்கிய நாடுகளின் நிரந்தர ஒருங்கிணைப்பாளரின் தலைமையில் குறிவைக்கிறது . நவம்பர் 29 அன்று, இலங்கை ஜனாதிபதி இந்த கடும் தாக்கத்திற்கு பதிலளிக்கும் வகையில் நாடு தழுவிய அவசர நிலையை அறிவித்து, உடனடி பேரிடர் நிவாரண மற்றும் மனிதாபிமான உதவியைக் கோரினார். வரும் வடகிழக்கு பருவமழை தொடர்ந்து அபாயங்களை உருவாக்குகிறது, மேலும் நாட்டின் சில பகுதிகளில் மேலும் மழைப்பொழிவு கணிக்கப்பட்டுள்ளது, இது வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயங்களைத் தொடர்ந்திருக்கச் செய்து, உயர் அபாயப் பகுதிகளில் இடம்பெயர்வை நீடிக்க வைக்கும்.

டிசம்பர் 11, 2025 அன்று, ஐக்கிய நாடுகளின் நிரந்தர ஒருங்கிணைப்பாளரின் தலைமையில், மனிதாபிமான சமூகம் மனிதாபிமான முன்னுரிமைத் திட்டத்தைத் தொடங்கியது, இது உதவி தேவைப்படும் 12 லட்சம் மக்களில் மிகவும் பாதிக்கப்பட்ட 6.58 ல்சம் பேரைக் குறிவைக்கிறது, இதற்கான நிதித் தேவை 353 லட்சம் அமெரிக்க டாலர்கள் ஆகும். ஐக்கிய நாடுகளின் மைய அவசர நிதி மையம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடி உயிர்காக்கும் உதவியை ஆதரிக்க 45 லட்சம் டாலர்களை ஒதுக்கியுள்ளது. இடம்பெயர்ந்த சமூகங்களுக்குள் பாதுகாப்புக் கவலைகள் அதிகரித்துள்ளன, குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு, கூடுதலாக நிரம்பிய தங்குமிடங்கள், சேவைகள் சீர்குலைதல் மற்றும் நீடித்த இடம்பெயர்வு ஆகியவை பாலின அடிப்படையிலான வன்முறை, சுரண்டல் மற்றும் உளவியல் பாதிப்பு ஆகியவற்றின் ஆபத்துகளை அதிகரிக்கின்றன.

வீடுகளுக்கான சேதம் மனிதாபிமான தேவைகளுக்கான முக்கிய காரணியாக உள்ளது, பல குடும்பங்கள் பகுதியாக சேதமடைந்த வீடுகளில் அல்லது தற்காலிக நிலைகளில் வாழ்கின்றனர், ,து காலநிலை, சுகாதார அபாயங்கள் மற்றும் பாதுகாப்புக் கவலைகளுக்கு அதிக வெளிப்பாட்டை ஏற்படுத்துகிறது.

மேலும், வாழ்வாதாரங்கள் குறிப்பாக நிலைக்குத்து விவசாயம், மீன்பிடி, தினசரி கூலித் தொழிலாளர்கள் மற்றும் சிறு வணிகங்களைச் சார்ந்த குடும்பங்களிடையே கணிசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பயிர்கள், கால்நடைகள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் சிறிய உற்பத்தி சொத்துகளின் இழப்புகள் ஈடுசெய்யும் வழிமுறைகளுக்கு வரையறுக்கப்பட்ட போக்குவரத்துத் திறன் மற்றும் அணுகல் உள்ள ஏழைக் குடும்பங்களை விகிதாசாரத்திற்கு மீறி பாதித்துள்ளன. பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கான அணுகல் சமமற்றதாகவே உள்ளது, மலைப்பாங்கான, மண்சரிவு பாதிப்புள்ள பகுதிகளில், குறுகிய இரண்டாம் நிலை சாலைகளுக்கான சேதம் சில தொலைதூர கிராமங்களை அடைவதை கடினமாக்குகிறது. ஒரு கூட்டு விரைவான தேவை மதிப்பீடு சுழற்காற்று தித்வாவிற்குப் பிறகு நடத்தப்பட்டது, இது ஆரம்ப பதில் திட்டமிடலுக்கு தகவல் அளித்தது, மேலும் ஒரு பரந்த இடை-அமைப்பு மதிப்பீடு தற்போது நடைபெற்று வருகிறது, இது மாறிவரும் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளை புரிந்துகொள்ள வழிவகுக்கும்.

கனடியத் தமிழ் காங்கிரஸ் (CTC) வெளியிட்ட அறிக்கையின்படி, மலையகத் தமிழ் சமூகங்கள் பல்லாண்டுகளாக பேரிடர் அபாயமுள்ள இடங்களில் வாழ்ந்து வருகின்றன் இப்பேரிடர் அவர்களது பொருளாதார பின்னடைவை மேலும் வெளிப்படுத்தியது. அரசாங்கத்தின் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் (DMC) வெளியிட்ட தரவுகளின்படி நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான வீடுகள் பாதிக்கப்பட்ட போதிலும், சில பிரதேசங்களில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் முழுமையாக சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 15 ஆக மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. உண்மையில் மலையகப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான வீடுகள் முழுமையாக அழிந்துள்ளன என சமூக அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. இத்தகைய தரவு குளறுபடிகள் நிவாரண விநியோகத்தை பாதிக்கின்றன.

கிராம சேவகர்களின் (Grama Niladhari) அலட்சியம், பாரபட்சம் மற்றும் அசமந்தபோக்கு இப்பிரச்சினைகளை மேலும் தீவிரப்படுத்தியுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்கள் உடனடி உதவிகளைப் பெறுவதில் தாமதம் ஏற்படுகிறது. அரசாங்கம் பாதிக்கப்பட்டோருக்கு பல நிவாரணங்களை அறிவித்துள்ளது.வெள்ளப் பாதிப்புள்ள வீடுகளை சுத்தம் செய்வதற்கு ரூ. 25,000 (முன்பு 10,000 ஆக இருந்தது உயர்த்தப்பட்டது).

➢ பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கு ரூ. 2,500,000 வரை இழப்பீடு.

➢ முழுமையாக அழிந்த வீடுகளுக்கு ரூ. 5,000,000 வரை நிவாரணம்.

➢ உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தனி நிவாரணங்கள்.

எனினும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்நிவாரணங்கள் போதுமானதல்ல என விமர்சிக்கின்றனர். முழுமையாக அழிந்த வீடுகளுக்கு ரூ. 50 இலட்சம், காணி இல்லாதோருக்கு அரச காணி, வீடும் காணியும் இல்லாதோருக்கு ரூ. 1 கோடி வழங்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

அனர்த்த முகாமைத்துவத்தின் மூன்று கட்டங்கள்

1. அனர்த்தத்திற்கு முன்னரான பாதுகாப்பு → ஆபத்தான ,டங்களில் குடியிருப்புகளை தவிர்த்தல், முன்னறிவிப்பு அமைப்புகளை வலுப்படுத்தல்.

2. அனர்த்தின் போதான நடவடிக்கைகள் → உடனடி மீட்பு, பாதுகாப்பான இடமாற்றம்.

3. அனர்த்தத்திற்கு பின்னரான கட்டியெழுப்பல் → நியாயமான நிவாரண விநியோகம், நிரந்தர வீடமைப்பு.

மலையகத்தில் இக்கட்டங்கள் பலவீனமாக உள்ளமை தொடர்ச்சியான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. எதிர்கால பரிந்துரைகளாவன வளிமண்டலவியல் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை போன்றவை மேலும் திறன் வாய்ந்த முன்னறிவிப்பு அமைப்புகளை அமைக்க வேண்டும்,தரவு சேகரிப்பில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல், கிராம சேவகர்களுக்கு பயிற்சி மற்றும் கண்காணிப்பு, கனடியத் தமிழ் காங்கிரஸ் பரிந்துரைத்தவாறு, மலையகத் தமிழ் சமூகங்களுக்கு நிரந்தர இடமாற்ற திட்டம் (பாதுகாப்பான மலையக காணிகள் அல்லது வடக்கு-கிழக்கு விருப்ப இடமாற்றம்) அமுல்படுத்தல் மற்றும் நிவாரணங்களை அதிகரித்து, பாரபட்சமின்றி விநியோகித்தல்.

இலங்கையின் பேரிடர் மேலாண்மை நிறுவனக் கட்டமைப்பு, தொழில்நுட்ப உதவி, நிதி வழங்கல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகிய பல முனைகளில் சவால்களை எதிர்கொள்கிறது. இயற்கையின் சீற்றங்கள் தவிர்க்க முடியாதவையாக இருப்பினும், அவற்றின் தாக்கத்தைக் குறைப்பது மனித நேய ஒத்துழைப்பு மற்றும் திறமையான திட்டமிடலின் கைகளில் உள்ளது. பாதுகாப்பான, நெகிழ்வுத்திறன் மிக்க சமூகத்தைக் கட்டியெழுப்ப, அரசு, தன்னார்வத் துறை மற்றும் ஒவ்வொரு குடிமகனும் தங்கள் பங்கை வகிக்க வேண்டியது அவசியம். வலுவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், திறமையான நிவாரணம் மற்றும் "மீண்டும் சிறப்பாக கட்டமைப்புகளை உருவாக்குதல்" (Build Back Better) என்னும் கொள்கையை மையமாகக் கொண்ட மறுகட்டமைப்பு ஆகியவை மனித இழப்புகளையும் பொருளாதாரச் சேதத்தையும் குறைக்க உதவும்.2024-2025 காலகட்டத்தின் கடுமையான பேரிடர் நிகழ்வுகள், வலுவான முன்னெச்சரிக்கை அமைப்புகள், திறம்பட்ட நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் சமூக முனைப்பு ஆகியவற்றின் அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றன. எதிர்காலத்தில், தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள், நிறுவன வலுவூட்டல் மற்றும் சமூக விழிப்புணர்வு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஒரு முழுமையான முறை, இலங்கையை பேரிடர்-எதிர்ப்பு தேசமாக உருவாக்கும்.

"பேரிடர் மேலாண்மை என்பது தொழில்நுட்ப மேம்பாடு மட்டுமல்ல, மனிதநேயத்தின் வலுவான அடித்தளத்தில் அமைந்த சமூக ஒப்பந்தமாகும்."






# ஐபிஎல் மினி ஏலம் அணிகளுக்கு ஏற்றமா? ஏமாற்றமா?

ஐபிஎல் 19-வது சீசனுக்கான (2026) மினி ஏலம் அபுதாபியில் அரங்கேறியது. 2025 மெகா ஏலத்திற்குப் பிறகு காலியாக இருந்த 77 இடங்களை நிரப்ப, 10 அணிகளும் இணைந்து ₹215.45 கோடி செலவிட்டுள்ளன. இந்த ஏலத்தில், வெளிநாட்டு வீரர்களும் இளம் இந்திய வீரர்களும் எதிர்பாராத விலைக்கு ஏலம் போயுள்ளனர்.

1. சென்னை சூப்பர் கிங்ஸ் (CSK)

அனுபவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் சிஎஸ்கே, இந்த முறை ரக் எடுத்துள்ளது. பிரசாந்த் வீர் மற்றும் கார்த்திக் சர்மா ஆகிய இருவருக்கு ₹28.40 கோடி செலவிட்டது பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது. ராகுல் சாஹர் மற்றும் நாதன் எல்லிஸின் வருகை பந்துவீச்சை பலப்படுத்தியுள்ளது.

2. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (KKR)

இந்த ஏலத்தில் ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்தது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிதான். ஆஸ்திரேலிய ஆல்-ரவுண்டர் கேமரூன் கிரீனை ₹25.20 கோடி என்ற பிரம்மாண்ட தொகைக்கு அந்த அணி வாங்கியது. இது ஐபிஎல் ஏல வரலாற்றில் ஒரு வெளிநாட்டு வீரருக்கு வழங்கப்பட்ட அதிகபட்ச தொகையாகும். அத்துடன், இலங்கை வேகப்பந்து வீச்சாளர் மதீஷா பத்திரனாவை ₹18 கோடிக்கு ஏலம் எடுத்து தனது பந்துவீச்சை அந்த அணி பலப்படுத்தியுள்ளது.

3. ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு (RCB)

கடந்த காலங்களில் அவசரப்பட்டு முடிவெடுத்த ஆர்சிபி, இந்த முறை நிதானமாக செயல்பட்டது. வெங்கடேஷ் ஐயர் (₹7 கோடி) மற்றும் இளம் வீரர் மங்கேஷ் யாதவ் (₹5.20 கோடி) ஆகியோரை வாங்கியது சிறந்த முடிவாகக் கருதப்படுகிறது.

4. சன்ரைசர்ஸ் ஹைதராபாத் (SRH)

ஏற்கனவே கிளாசன், ஹெட் ஆகியோரை வைத்துள்ள ஹைதராபாத், இப்போது லியம் லிவிங்ஸ்டனை (₹13 கோடி) இணைத்துள்ளது. இதன் மூலம் ஐபிஎல்லின் மிகவும் ஆபத்தான பேட்டிங் வரிசையை அவர்கள் கொண்டுள்ளனர்.

5. டெல்லி கேபிடல்ஸ் (DC)

டெல்லி அணி கம்மியான விலையில் சிறந்த வீரர்களை வாங்கியுள்ளது. டேவிட் மில்லர் மற்றும் பென் டக்கெட் ஆகியோரை தலா ₹2 கோடிக்கு வாங்கியது மிகச்சிறந்த “டீல்“ ஆகும்.

6. லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் (LSG)
விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன் ஜோர்‘ இங்கிலிஸை ₹8.60 கோடிக்கு வாங்கியதன் மூலம் ரிஷப் பண்டிற்கு ஒரு பேக்-அப் வீரரை லக்னோ பெற்றுள்ளது.

7. பஞ்சாப் கிங்ஸ் (PBKS)

ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையில் களம் காணும் பஞ்சாப், பென் துவார்ரியஸ் மற்றும் கூப்பர் கானோலி ஆகியோரை எடுத்து பந்துவீச்சைச் சீரமைத்துள்ளது.

8. குஜராத் டைட்டன்ஸ் (GT)

குஜராத் அணி ஆல்-ரவுண்டர் ஜேசன் ஹோல்டரை ₹7 கோடிக்கு ஏலம் எடுத்துள்ளது. “ப்மன் கில் தலைமையில் இந்த அணி சமநிலையான வீரர்களைக் கொண்டுள்ளது.



9. மும்பை இந்தியன்ஸ் (MI)

ஏற்கனவே வலுவான மையக் கட்டமைப்பைக் கொண்டுள்ள மும்பை இந்தியன்ஸ் அணி, இந்த ஏலத்தில் பெரிய தொகையைச் செலவிடாமல் தனது “ஸ்க்வாட்“டை (Squad) ஆழப்படுத்துவதில் கவனம் செலுத்தியது. குறிப்பாக, துடுப்பாட்டத்தில் சிறந்த விக்கெட் காப்பாளர் குயின்டன் டிகொக் ஒரு கோடிக்கு வாங்கியது மிகச் சிறந்த திட்டமாக உள்ளது. இந்த மினி ஏலத்தில் அந்த அணி ஒரு “பேக்-அப்“ திட்டத்துடனேயே களம் இறங்கியது.

10. ராஜஸ்தான் ராயல்ஸ் (RR)

ராஜஸ்தான் ராயல்ஸ் அணி இந்த ஏலத்தில் தங்களது சுழற்பந்து வீச்சு மற்றும் ஆல்-ரவுண்டர் பிரிவில் இருந்த சிறிய இடைவெளிகளை நிரப்ப முயன்றது. குறிப்பாக, மிடில் ஆர்டரில் அதிரடி காட்டக்கூடிய வீரர்களையும், டெத் ஓவர்களில் கைகொடுக்கக்கூடிய பந்துவீச்சாளர்களையும் குறிவைத்தது. சஞ்சு சாம்சன் சிஎஸ்கே அணிக்குச் சென்ற பிறகு, அணியின் தலைமை மற்றும் விக்கெட் கீப்பிங் பொறுப்புகளைச் சரிசெய்யும் வகையில் சில முக்கிய மாற்றங்களைச் செய்தது. பெரிய நட்சத்திரங்களை விட, அணியின் தேவைக்கேற்ப விளையாடக்கூடிய வீரர்களைக் குறைந்த விலைக்கு ஏலம் எடுத்தது ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் தனிச்சிறப்பாக அமைந்தது.

இந்த ஏலத்தின் மூலம் கொல்கத்தா மற்றும் சென்னை அணிகள் மற்ற அணிகளை விட ஒரு படி மேலே இருப்பதாகத் தெரிகிறது. அதே நேரத்தில் டெல்லி மற்றும் பெங்களூரு அணிகள் தங்களது பலவீனங்களைச் சரியாக அடையாளம் கண்டு வீரர்களைத் தேர்வு செய்துள்ளன. 2026 ஐபிஎல் கோப்பையை வெல்லப்போகும் பலப்பரீட்சைக்கு அனைத்து அணிகளும் இப்போது தயாராகிவிட்டன.

